1994 மார்ச் 19]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ): இந்தக்கேள்வி கேட்கப்படும் பொழுது அங்கு சத்துணவு மையம் இல்லை. ஆனால், கேள்வி வருகிற பொழுது மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவின் பேரில் புதிய சத்துணவு மையம் துவக்கப்பட்டதோடு அதற்குப் புதிய கட்டிடம் வழங்கப்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலக நாடுகளும், மற்றும் யுனிசெப் போன்ற உலக நிறுவனங்களும், உலக சமூக சேவகர் அன்னை தெரசா அவர்களும் பாராட்டுகின்ற வகையில் சமூக நலத் துறையில் பல்வேறு சாதனைகள், உலக நாடுகளுக்கு எடுத்துக் காட்டாகச் செய்து கொண்டிருக்கும் எங்களின் அன்புத் தாய் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அரசு பச்சமலை, வண்ணாடு, தண்ணீர் பள்ளம் கிராமத்தில் சத்துணவு மையம் அமைக்க வேண்டுமென்ற வினாவைக் கேட்டவுடனே அதன்மீது நடவடிக்கை எடுத்து சத்துணவு மையம் அமைத்துக் கொடுத்தற்காக என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 52 திரு. கு. சீனிவாசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

52—

மன்னார்குடி தொகுதி பாலையூர் உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டுதல்.

*21037 திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதிப் பாலையூர் உயர்நிலை, பள்ளி கட்டிட வசதியின்றி ஊராட்சி ஒன்றியக் கட்டிடத்தில் இயங்குவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பள்ளிக்கு புதிய கட்டிடம் எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,

[1994 மார்ச் 19

(அ) மன்னார்குடி தொகுதி, பாலையூரில் உள்ள உயர் நிலைப்பள்ளிக்குச் சொந்தமான நிலம் இல்லாத காரணத்தால் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான கட்டிடத்தில் பள்ளி இயங்குவதை அரசு அறியும்.

(ஆ) மாண்புமிகு உறுப்பினர் பள்ளிக்குத் தேவையான நிலத்தைப் பெற்றுத்தர முன் வந்தால் நிதி நிலைக்கு ஏற்பவும், முன்னுரிமை அடிப்படையிலும் கட்டிடம் கட்டுவது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி தொகுதி, பாலையூரில் உள்ள உயர்நிலைப்பள்ளிக்குக் கட்டிடம் கட்டுவதற்கான இடத்தைத் தேர்வு செய்து தந்தால் கட்டிடம் கட்டுவதற்கு அரசு ஆவண செய்யும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்தப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டுவதற்கு அந்த ஊரிலேயே, அந்த ஊர் நலக் கமிட்டியினர் கிட்டத்தட்ட அதற்குத் தேவையான நிலங்களைத் தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். அதற்கு அந்த உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் மூலம், கல்வித் துறைக்குக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே, வரும் கல்வியாண்டில் அந்தப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டித் தருவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 1[illegible]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அடிப்படையிலும், முன்னுரிமை அடிப்படையிலும் அரசு இது குறித்துப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 53, திரு. வெ. தமிழரசு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

53—

ஆத்தூர் வட்டம், வட சென்னிமலையில் அறிஞர் அண்ணா கலைக் கல்லூரிக்கு கூடுதல் வசதிகள் அளித்தல்.

*22470—திரு. வெ. தமிழரசு :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—